## மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியம இல 18 - சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்படுகையில் ஒரு சொத்தினைச் சார்ந்த சொத்து வகுதி முழுதும் மீள்பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டின் போது வாகனங்கள் மீள்பெறுமதியிடப்படுகையில் ஒரு வாகனம் மீள் பெறுமதியிடப்பட வில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ஊழியர்களின் தொலைபேசி பட்டியல்கள் ரூபா 31,299 ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் இது பெறவேண்டிய காசாக கணக்கிடப்படுவதற்குப் பதிலாக நிறுவகத்தின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 2,924,241 தொகை பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு

ஒதுக்கக் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் இக் காரணத்தினால் உரிமை மூலதனம் அதே தொகையால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டின் போதும் மீள்மதியீட்டு ஒதுக்கத்திலிருந்து ரூபா 2,922,628 தொகையான செயற்பாட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டின் இளைஞர் சேவைகள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள தொழிநுட்பக் கல்வி அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் கணக்கீட்டு பக்கேஜ் அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் பெறுமதி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. ‘‘கணக்கீட்டுத் பக்கேஜ்ஜின் வேலை முடிவடையவில்லை எனவும் பெறுமதி அமைச்சினால் அறிவிக்கப்பட்டதை அடுத்து கணக்கிடப்படுவதாகவும் ‘‘ பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிககாரசபையின் 12 நிலையங்களின் பாடநெறிகளுக்காக உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆணைக்குழுவினால் ரூபா 3,360,399 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 1,945,811 தொகை செலவிடப்பட்டு மிகுதி ரூபா 1,414,588 தொகை பெறவேண்டிய தொகை இனங்காணப்படக் கூடிய வகையில் கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 மே மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை வங்கியில் கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட மற்றும் வங்கியில் தவறாக இனங்காணப்பட்ட 22 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 90,621 தொகையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறப்பட உள்ள கடன் காலத்தின் பிரகாரம் மீளாய்வு

பெறப்பட உள்ள கடன் மீதியில் 5 வருட காலத்திற்கு மேற்பட்ட ரூபா 2,260 தொகையான விழா முற்பண மீதியும், 2006 ஆம் ஆண்டின் போது சேவையில் இருந்து விலக்கப்பட்ட ஊழியர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 58,445 தொகையான கடன் மீதியும் ரூபா 300 தொகையான விழா முற்பண மீதியும், 2010 ஆம் ஆண்டில் சேவையில் இருந்து விலக்கப்பட்ட இரு

ஊழியர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 146,267 தொகையான இடர் கடன் மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத எழுத்துமூலச் சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| மாணவர் முன்னேற்ற அறிக்கைப் புத்தகங்கள் | 1,654,890 | மீதிகளின் உறுதிப்படுத்தல் பட்டோலைகள் |
| கடன்பட்டோர் | 27,528 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| வைப்புகள் மற்றும் பெறவேண்டிய மீதிகள் | 783,529 | மேற்படி |
| தேசிய தொழிற்திறன் நியமம் | - | இருப்புப் பதிவேடு<br>பட்டோலைகள்<br>மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| நாட்குறிப்புப் பதிவுகள் | - | நாட்குறிப்புப் பதிவுகளுக்குரிய வளக்கக் குறிப்புகள் |
| கொள்வனவுகள் | 1,199,986 | விலைக் கோரல்கள் |
| பழுதுபார்த்தல்களும் ஏனைய செலவினங்களும் | 706,719 | கொடுப்பனவு<br>உறுதிச்சீட்டுக்களுக்கு உரித்தான பட்டியல்கள் |

### 1.2.5 சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச்சட்டம் | |
| i 8(1) ஆம் பிரிவு | பாதீடு 3 மாதங்களுக்கு முன்னர் நிர்வாகச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2010 நவம்பர் 24 ஆம் திகதியே அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. |
| ii 8(3) ஆம் பிரிவு | பாதீட்டுடன் பாதீடிடப்பட்ட இலாபநட்டக் கணக்கு அல்லது பாதீட்டுக் கணக்கு மற்றும் ஐந்தொகை ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவை | |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட இரு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 146,267 தொகையினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை அல்லது பிணையாளரிடம் இருந்து அறவிடப்படுவதற்கு இது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| i. | இல. 386(6) | கொடுப்பனவிற்காக வழங்கப்பட்ட சகல காசோலைகளும் குறுக்குக் கோடிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு குறுக்குக் கோடிடப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 2 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| ii. | இல. 785(4) | வாகனப் பழுதுபார்த்தல்களின் போது அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவகங்களில் இருந்து விலைகள் கோரப்பட்டு ஆகக் குறைந்த போட்டி விலையில் பெறப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| iii. | இல. 1646 | ஒவ்வொரு மாதத்திற்காகவும் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்த பொழிப்புகளும் இதனை அடுத்துவரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 12 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் 2009 முதல் 2011 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.5 (அ) ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் ‘‘சீ’’ தரத்திலான கூட்டுத்தாபனத்தில் உத்தியோகபூர்வ வாகனங்கள் தலைவர், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளர்களுக்காக மாத்திரமே ஒதுக்கப்படக் கூடிய போதிலும் |

| | | |
|---|---|---|
| | | இதற்கு முரணாக பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு வாகனம் ஒன்று ஒதுக்கப்பட்டு இதற்காக மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ரூபா 165,600 படி எரிபொருள் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1999 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 1.3.1(iii) ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் குழுவாக போக்குவரத்து வசதிகளை வழங்க வேண்டிய போதிலும் 6 உத்தியோகத்தர்களுக்கு தனித்தனியாக வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (உ) | 1994 ஆகஸ்ட் 3 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இல. 01/2002 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதம் | ஒதுக்கப்பட்ட வாகனங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினையும் நிறுவனத்தின் பெயரும் பொறிக்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | ஆணைக்குழுவின் நிதி அறிவுறுத்துரைகள் இலக்கம் 1 இன் 10 ஆம் பிரிவு | முறையான மதிப்பீடுகளின்றி முற்பணங்கள் வழங்கப்படுவதும், முன்னர் பெற்ற முற்பணத்தைத் தீர்த்துவைக்காத உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டிருந்த 10 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (எ) | 2008 யூலை 28 ஆம் திகதிய பீ௩டீ 50 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவு | குழுவாக போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் போவதற்கும் வருவதற்குமாக ஆகக் கூடிய தூரம் 50 கி.மீ. களாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இரு உத்தியோகத்தர்களுக்காக அத் தூரத்திற்கு மேலாக போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. |

### 1.2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்

ஆணைக்குழுவினால் பாடநெறி ஒப்புதலுக்காக (accreditation) நிதியுதவி வழங்கப்படுகையில் உரிய நிறுவகத்துடன் ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாது 3 அரசாங்க நிறுவகங்களுக்கு ரூபா 3,178,305 தொகை வழங்கப்பட்டிருந்தது.

### 1.2.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகத்தின் வாகனம் இருக்கையில் 2011 ஒக்டோபர் 11 முதல் 14 ஆம் திகதி வரை பயிற்சி நிலையங்கள் ஏற்றலுக்காக வாடகை வாகனம் ஒன்றைப் பெற்று ரூபா 37,810 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவிற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கிற்கு இரு தடவைகள் தோற்றுவதற்காக அரச சட்டத்தரணி ஒருவரைப் பெற்றுக்கொள்ளாது வேறு நபரைப் பெற்றமைக்காக ரூபா 15,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) குழுவாக போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு 2 வாகனங்களை ஈடுபடுத்துவதற்கு இயலுமை இருக்கையில் வேறாக 5 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. இச் செயற்பாடு 2 வாகனங்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுவதற்கான இயலுமை இருக்கையில் 4 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 288,000 தொகை விளைவற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆணைக்குழுவினது செயற்பாட்டு நடவடிக்கைகளால் ரூபா 1,575,803 தொகையான மிகை காணப்பட்டதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 812,916 தொகையான பற்றாக்குறை காணப்பட்டது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 2,388,719

தொகையான அதிகரிப்பு காணப்பட்டது. இது பின்வருமாறு பகுப்பாய்வு செய்யமுடியும்.

| | சாதகமானவை | பாதகமானவை | கூட்டுத்தொகை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | |
| மானியம் மற்றும் உதவிப் பெறுவனவு | 27,573,943 | - | |
| ஏனைய வருமானம் | 1,915,015 | - | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 2,051,884 | - | |
| | 31,540,842 | - | 31,540,842 |
| **செலவினம்** | | | |
| செயற்பாட்டுச் செலவினம் | - | 20,243,236 | |
| நிர்வாகச் செலவினம் | - | 3,848,251 | |
| ஏனைய செலவினம் | - | 2,453,090 | |
| பெறுமானத்தேய்வு | - | 1,230,852 | |
| செயற்திட்டச் செலவினம் | - | 1,376,694 | |
| | - | 29,152,123 | 29,152,123 |
| மிகையில் தேறிய வீழ்ச்சி | | | 2,388,719 |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

#### 3.1.1 வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத்திட்டம் 2011 யூலை 27 ஆம் திகதி மீண்டும் திருத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இவ்வாறு திருத்தப்பட்ட திட்டத்திலுள்ள இலக்குகளை எய்துவதற்கு ஆணைக்குழுவிற்கு முடிந்திருந்தது. இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) திட்டமிடலும் ஆராய்ச்சிப் பிரிவும்

மீளாய்வாண்டின் போது பாதிப்பிற்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தொழில்சார் பயிற்சி வழங்கும் நிறுவனங்களில் 16 பாடநெறிகளுக்காக நிதியுதவி வழங்குவதற்காக ரூபா 2 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 10 பாடநெறிகளுக்காக ரூபா 1,993,000 தொகையான நிதிஉதவி மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) பாடநெறிகளின் ஏற்புடமையும் பயிற்சி நியமப் பிரிவும்

(i) மீளாய்வாண்டின் போது பயிற்சிப் பாடநெறிகளின் தரப்படுத்தல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| பயிற்சி வழங்கும் நிறுவகம் | ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | ஒப்புதல் பாடநெறிகளின் எண்ணிக்கை | மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறிகள் ஒப்புதல் எண்ணிக்கை பாடநெறிகளின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபை | 49 | 21 | 14 | 67% |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 44 | 20 | - | 0% |
| தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 76 | 85 | 63 | 74% |
| இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபை | 106 | 131 | 93 | 71% |
| வேறு அரச நிறுவகங்கள் | 15 | 07 | 04 | 57% |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் | 88 | 177 | 52 | 29% |

அவதானிப்புகள் பின்வருமாறாகும்

அரச பிரிவு, தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புப் பிரிவுகளின் ஒப்புதல் மதிப்பீடு மற்றும் ஒப்புதல்களின் தரப்படுத்தல் எதிர்பார்த்த இலக்கைப் பார்க்கிலும் வீழ்ச்சி காணப்பட்டதுடன் பயிற்சி வழங்கும் நிறுவகமாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் ஒப்புதலின் போக்கு குறைவான மட்டத்தில் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது ஒப்புதலை புதுப்பிப்பதற்காக பயிற்சி வழங்கும் நிறுவகமாக விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல், மதிப்பிடல், மற்றும் ஒப்புதலை புதுப்பித்தல் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| பயிற்சி வழங்கும் நிறுவகம் | ஒப்புதலுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | ஒப்புதல் பாடநெறிகளின் எண்ணிக்கை | மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறிகள் ஒப்புதல் பாடநெறிகளின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபை | 06 | 11 | 06 | 55 |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | - | 04 | - | 0 |
| தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 16 | 21 | 16 | 76 |
| இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை | 21 | 41 | 31 | 76 |
| வேறு அரச நிறுவகங்கள் | 01 | - | - | - |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் | 23 | 30 | 27 | 90 |

(இ) தேசிய தொழில்சார் பயிற்சி தகமைப் பிரிவு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது தேசிய தொழிற்திறன் நியமம் தொடர்பான 02 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 02 கூட்டங்கள் நடாத்தப்படுவதற்கும் 10 தேசிய தொழில் திறன் நியமங்களின் 100 பிரதிகளைத் தயாரிக்கப்படுவதற்கும் இலக்கிடல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) தேசிய தொழிற்திறன் தகமை முறைமையை விஸ்தரித்து பேணுவதற்கான இலக்கை அடைவதற்கு முடியாதிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| விபரம் | இலக்கிடப்பட்ட நிலை | உள்ளபடியான நிலை | இலக்கை எய்தாமை |
|---|---|---|---|
| தேசிய தொழிற்பயிற்சி தகைமை 5 ஆம் 6 ஆம் மட்டத்தில் தேசிய திறன் நியம அபிவிருத்தி | 2 | - | மதிப்பிடப்பட வில்லை |
| தேசிய தொழிற் தகமைகள் 1–4 மட்டத்தில் தேசிய திறன் நியம அபிவிருத்தி | 5 | 2 | 3 |
| கல்வி நடைமுறைகள்/ பாடவிதானம் அறிமுகப்படுத்தல் | 7 | 6 | 1 |
| மதிப்பீட்டாளர்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கல் | 150 | 76 | 74 |
| திறன் அடிப்படையில் மதிப்பீட்டு மேற்கொள்வதற்காக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் | 8 | 2 | 6 |

| | | | |
|---|---|---|---|
| திறன் அடிப்படையிலான மதிப்பீடுகளை உறுதிப்படுத்துவதற்காக | | | |
| - கணக்காய்வுகள் | 24 | 10 | 14 |
| - திடீர் கணக்காய்வுகள் | 12 | 7 | 5 |

(ஈ) i இலங்கையில் மூன்றாம் மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி துறையின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக நம்பிக்கையான முறைமையை நிறுவிப் பேணுவதற்கான இலக்கை அடைந்துகொள்ளல் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | இலக்கிடப்பட்ட நிலை | உள்ளபடியா ன நிலை | இலக்கை எய்தாமை |
|---|---|---|---|
| பயிற்சி நிறுவனங்களைப் பதிவுசெய்தலின் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தப்படல் | 2 | 0 | 2 |
| பாடநெறி மதிப்பீடு - அரச பிரிவு | 92 | 77 | 15 |
| - தனியார் பிரிவு | 55 | 30 | 25 |
| பாடநெறி பதிவைப் புதுப்பித்தல் | | | |
| - அரச பிரிவு | 92 | 51 | 41 |
| - தனியார் பிரிவு | 55 | 27 | 28 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தல் | 5 | 0 | 5 |
| - மதிப்பீட்டாளர்களுக்காக | 1 | 0 | 1 |
| - பாடநெறி ஒப்புத்தலுக்காக | 1 | 0 | 1 |

(i) இலங்கையின் சகல தொழில் பயிற்சி நிறுவகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிராத பயிற்சி நிறுவகங்களின் ஓர் பட்டியலை இனங்காண்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயற்திறன் அறிக்கையின் பிரகாரம் அவ்வாறு இனங்காணப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி உதவி வழங்கப்படல்

(i) மீளாய்வாண்டின் போது அரசாங்க துறையின் நிறுவனங்களுக்காக ரூபா 16,988,909 தொகையான நிதியுதவி வழங்கப்பட்டிருந்ததுடன் அந் நிறுவகத்தினால் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுதல் மற்றும் பாடநெறி ஒப்புதல் நடவடிக்கைகள் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களின் போது எஞ்சிய பணம் 14 நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்காக ரூபா 6,876,569 தொகையான நிதியுதவி வழங்கப்பட்டிருந்ததுடன் இந் நிதியுதவியை வழங்கிய நிறுவகத்தில் இருந்து பாடநெறிகள் ஒப்புதல் நடவடிக்கைகள், உபகரணக் கொள்வனவு மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| நிறுவகம் | தொகை | ஏனையவை |
|---|---|---|
| • எஸ்.டபிள்யூ.எச். தொழிற் பயிற்சி நிறுவகம் - அநுராதபுரம் | 201,892 | என்வீகியூ 3 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் என்வீகியூ 2 ஆக இருந்தமையும் ஒப்புதலை நிறுத்தலும் |
| • மியானி தொழிநுட்ப நிறுவகம் - மட்டக்களப்பு | 276,150 | ஒப்புதல் செய்யாமை |
| • தொன்பொஸ்கோ தொழிநுட்ப நிறுவகம் - கண்டி | 111,371 | ஒப்புதலுக்காக மதிப்பீடு செய்யாமை |

| | | |
|---|---|---|
| • புனித அந்தோனியார் தொழிநுட்ப நிறுவகம் | 173,481 | ஒப்புதல் 2011 சனவரியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மீளப் பெறப்படாமை. |
| • டேக் விதானிக்கா தொழில்சார் பயிற்சி நிலையம் | 53,200 | பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை |
| • இலத்திரனியல் தொழிநுட்ப பயிற்சி நிறுவகம் - நீர்கொழும்பு | 28,525 | பொறுப்பு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிராமை |
| | --------------- | |
| | 844,619 | |
| | ======= | |

(iii) 2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரை அரச துறைக்கு பாடநெறி ஒப்புதலுக்காக வழங்கப்பட்ட ரூபா 19,213,747 தொகையான நிதியுதவிகளுக்குரிய பாடநெறிகள் 2012 ஆம் ஆண்டின் மார்ச் வரையிலும் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. தனியார் பிரிவின் 3 பயிற்சி நிறுவகங்களுக்கு ரூபா 562,743 தொகையான நிதியுதவி வழங்கப்பட்டிருந்த போதிலும் அப் பாடநெறி 2012 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

(iv) அரச துறையில் 2 பயிற்சி நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,226,450 தொகையிலிருந்து உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 497,964 தொகை செலுத்தப்பட்டிருந்த 2 அரச நிறுவகங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக 2011 மே 23 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பதவியணியினரைப் பயிற்றுவிப்பிற்காக ரூபா 358,151 தொகை செலவிடப்பட்டிருந்தது. 4 ஊழியர்களுக்கு ரூபா 75,300 தொகை செலவிட்டு பதவியுடன் தொடர்பற்ற பயிற்சிகளை வழங்குதல், ஊழியர்களுடன்

உடன்படிக்கை ஏற்படுத்தப்படாமை, பாடநெறிகள் பூர்த்திசெய்யப்பட்டமைக்கான சான்றுகள் இன்மை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) வாகனத் தொடரினைப் பரீட்சித்தல்

ஆணைக்குழுவிடம் 12 வாகனங்கள் காணப்பட்டதுடன் 6 சாரதிகள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதன் படி 6 வாகனங்கள் முழு நேர சேவையில் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மூன்றாம் நிலைக் கல்வி அபிவிருத்தி செயற்திட்ட உதவி (TEDP மானியம்)

இம் மானியத்தின் கீழ் ஒப்புதல்செய்யப்பட்ட பயிற்சி வழங்குனர்களின் சங்கத்தினால் 2011 ஆம் ஆண்டின் போது தேசிய தொழில்சார் தகமைகளை தெளிவுபடுத்தல் (NVQ Awarness Programme) 5 நிகழ்ச்சித்திட்டங்களும் கண்காட்சியும் செயலமர்வும் நடாத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 623,566 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ரூபா 220,000 தொகை செலவில் நடாத்தப்பட்ட செயலமர்வு தொடர்பான தெரிவுச் செவ்வையின் போது பங்குபற்றியோர் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படாமை அச்சிடப்பட்ட அழைப்பிதழ்கள் பகிரப்பட்டிராமை, குறித்த நேர அட்டவணைப்படி வேலை பூர்த்திசெய்யப்பட்டிராமை என்பவற்றின் காரணமாக ரூபா 53,050 தொகையான மேலதிக செலவினத்தை ஏற்றல், டிக்கட் வருமானம் கணக்கு வைக்கப்பட்டிராமை போன்ற விடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் வேறு நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கப்படும் ரூபா 36,000 தொகையான முற்பணத் தொகையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,198,000, ரூபா 64,000 மற்றும் ரூபா 1,366,000 செலவில் 5 ஆய்வுகளும் 6 ஆய்வுகளும் நடாத்தப்பட்டிருந்ததுடன் ஆய்வுத் தேவைப்பாடு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டிராமை, ஆய்வு ஒப்புதல் உள்ள நபர்களை ஈடுபடுத்தாமை, ஆய்வு அறிக்கைகள் ஆணைக்குழுவின் இலக்கை எய்துவதற்காக செயற்படுத்தப்பட்டிராமை, தொழிநுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவகத்திற்கு ஒப்படைக்கும் ஆய்வுகளைச் செயற்படுத்துவதற்காக அவசியமான நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டிராமை போன்ற விடயங்கள் காரணமாக

ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 3.1 ஆம் பிரிவின் நோக்கம் எய்தப்பட்டுள்ளதா என்பது குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

(ஊ) கணக்கீட்டு மென்பொருள் கொள்வனவு

2006 ஆம் ஆண்டில் ஆணைக்குழு ரூபா 345,000 பெறுமதியான கணக்கீட்டு மென்பொருளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு இதற்காக ரூபா 120,000 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய முற்பணத்தைப் பார்க்கிலும் ரூபா 60,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 நிதிகளின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பிரதான வங்கி நடைமுறைக்கணக்குகள் இரண்டில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அளவிலான காசு மீதி விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இந்த இரண்டு வங்கிக் கணக்குகளிலும் காணப்பட்ட பணத்தின் சராசரி மாதாந்தச் செலவு ரூபா 5,111,455 மற்றும் ரூபா 7,129,730 ஆகக் காணப்பட்டன. இதன் பிரகாரம் மிகை நிதி நடைமுறைக் கணக்குகளில் வைத்துக்கொள்ளப்படாது முதலீடு செய்து வருமானத்தை உழைப்பதற்கு இருந்த மாற்றுவழி தொடர்பாக ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டிருக்கவில்லை. ஒரு வங்கிக் கணக்கில் மாத ஆரம்பத்தில் நிலவிய மீதி வழமையான மாதாந்த செலவில் 4 மடங்கில் இருந்து 73 மடங்கிற்கு இடைப்பட்ட வீச்சில் நிலவிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) 2005 ஆம் ஆண்டின் சனவரி 06 ஆம் திகதிய தொழில் சார் மற்றும் தொழிநுட்பப் பயிற்சி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட 51- 9656 ஆம் இலக்க வாகனம் 2011 மார்ச் 28 ஆம் திகதி முதல் 2012 மார்ச் 30 ஆம் திகதி வரை ஒருகொடவத்தை மோட்டார் வாகனம் பொறியியல் பயிற்சி நிறுவகத்தில் பாதுகாப்பற்ற விதத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் இவ் வாகனத்தை அகற்றுவதற்காக இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிதகமையும் நல்ஆளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த திருத்திய பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட தொகைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் என்பவற்றிற்கிடையே செலவுகளில் 7% முதல் 85% வரையான வீச்சிலும் வருமானங்களில் 37% முதல் 237% வரையான வீச்சிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் நிலவிய குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களின் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) காசு மற்றும் வங்கி
(இ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஈ) வாகனப் பயன்பாடு
(உ) பதவியணி முகாமைத்துவம்
(ஊ) ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்